## கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் ரத்து!

# தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஓரவஞ்சனை!

## மக்கள் பெரும் கொந்தளிப்பு!

சென்னை, நவ.20-

**கோவை மற்றும் மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்கு அனுமதியை ஒன்றிய அரசு மறுத்துள்ளது. தமிழகத்திற்கு ஒன்றிய அரசு தொடர்ந்து ஓரவஞ்சனை செய்து வருவதாக கூறப்படும் நிலையில் மெட்ரோ திட்டத்திற்கு அனுமதி அளிக்காதது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.**

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது, கடந்த 2011ம் ஆண்டில், மெட்ரோ ரயில் திட்டங்களை நிறைவேற்று வதற்குத் தகுதியான நகரங்களாக, இந்தியாவில் 19 இரண்டாம் நிலை நகரங்களை ஒன்றிய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு துறை அமைச்சகம் தேர்வு செய்தது.

அந்த பட்டியலில் தமிழகத்திலிருந்து இடம்பெற்றிருந்த ஒரே நகரம், கோவை மட்டுமே. அந்த பட்டியலில் இடம் பெற்றிருந்த கொச்சி, புனே ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு விட்டது. ஆனால், சுமார் 14 ஆண்டுகளாகியும் கோவையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் இன்னும் தொடங்கவே இல்லை. ஒன்றிய அரசு அறிவித்த மெட்ரோ திட்டத்தை எதிர்த்த அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, மோனோ ரயில் திட்டத்தையே தமிழக அரசு முன்னெடுக்கும் என்று அறிவித்தார். அதன்பின்னர் கடந்த 2017ம் ஆண்டில், கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வரப்படுவற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க முடிவானது.

அதன்படி, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இரு டெண்டர்களை விட்டது. இதற்கு தேர்வான சிஸ்ட்ரா என்ற ஆலோசனை நிறுவனம் கடந்த 2019ம் ஆண்டிலேயே சாத்தியக்கூறு அறிக்கையை தாக்கல் செய்தது.

கடந்த 2021ம் ஆண்டில் சட்டமன்ற தேர்தலுக்கு முன், பிப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட்டில், கோவையில் ரூ.6,683 கோடி மதிப்பில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் நிதி ஒதுக்கப்படவில்லை.

அதன்பின், 2021-2022 பட்ஜெட் கூட்டத்தொடரின்போது, பதிலளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள் "கோவையுடன் சேர்த்து மதுரையிலும் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்துவதற்கு ஒன்றிய அரசிடம் நிதியுதவி கோரப்படும்" என்று பதிலளித்தார்.

கடந்த 2023ம் ஆண்டு, கோவை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதற்கட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையை சிஸ்ட்ரா நிறுவனம் தயாரித்து, தமிழக அரசிடம் சமர்ப்பித்தது. சாத்தியக்கூறு அறிக்கையில் கூறப்பட்ட கோவையில் 5 வழித்தடங்களில் முதற்கட்டமாக இரண்டு வழித்தடங்களில் மெட்ரோ ரயில் தடம் ரூ.10,740 கோடியில் அமைக்கும் வகையில், 655 பக்கங்களில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

இதேபோல், மதுரையில் ரூ.11,360 கோடியில் ஒத்தக்கடை முதல் திருமங்கலம் வரை ஒரே வழித்தடத்தில் மெட்ரோ ரயில் தடத்திற்கு 936 பக்கங்களில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.



**பா.ஜ. ஆளும் நகரங்களுக்கு மட்டும் அனுமதி!**

| நகரம் | மக்கள் தொகை |
|---|---|
| ஆக்ரா | 16 லட்சம் |
| பாட்னா | 17 லட்சம் |
| போபால் | 18.8 லட்சம் |

இதேபோல், பா.ஜ. ஆளும் மாநிலங்களில் உள்ள இரண்டாம் நிலை நகரங்களான கான்பூர், நாக்பூர், புனே, இந்தூர், சூரத் ஆகிய இடங்களுக்கு மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

2011ம் ஆண்டு நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி

| | |
|---|---|
| கோவை | 23.5 லட்சம் |
| மதுரை | 24.9 லட்சம் |

தற்போதைய வாக்காளர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| கோவை | 30,81.594 |
| மாநகரில் | 15,38,411 |
| மதுரை | 27,40,631 |
| மாநகரில் | 16,15,990 |

அதன்பின், அரசாணை வெளியிடப்பட்டு, நிலவியல் சர்வேயும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்ட அறிக்கை, 2023 ஜூலையில் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதற்கு 2024 பிப்ரவரியில் ஒப்புதலும் தரப்பட்டது.

ஆனால், கடந்த 2024ம் ஆண்டு மே மாதத்துக்கு முன்பாக தமிழக அரசு சமர்ப்பித்த இந்த அறிக்கையில் சில விரிவான விளக்கங்களை கேட்டு, சில நாட்களிலேயே ஒன்றிய அரசு திருப்பி அனுப்பி விட்டது. அதாவது, 2017 மெட்ரோ ரயில் திட்ட கொள்கையின்படி, மெட்ரோ திட்டத்துடன் லைட் மெட்ரோ போன்ற மாற்று திட்டம், பி.ஆர்.டி.எஸ்., பொது போக்குவரத்து திட்டங்க ளுக்கான பிற விவரங்கள் மற்றும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் போக்குவரத்து வசதிகளுக்கான ஆய்வு அறிக்கையுடன் சேர்த்து ஒருங்கிணைந்த திட்டத்தை அனுப்புமாறு கேட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக, அக்டோபர் 26 அன்று, சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டம் தொடர்பாக, சென்னையில் முக்கிய கூட்டம் நடந்தது. அதில் பங்கேற்க வந்திருந்த ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் மனோகர் லாலிடம், கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, கடந்த ஆண்டு ஜூலையிலேயே கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான தேவைகள் குறித்து, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் அதிகாரிகள் கோவை, மதுரைக்கு சென்று கள ஆய்வு செய்தனர்.

ஆனால், இத்திட்டத்துக்கு தற்போது ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டு, இத்திட்டம் நிறைவேற்றப்படாது என கைவிரித்துள்ளது. இதற்கு 20 லட்சம் மக்கள் தொகை இல்லை என காரணம் காட்டியுள்ளது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்துவிட்டு பா.ஜ., அரசு ஆளும் மாநிலங்களில் சிறிய ஊர்களுக்கு மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு அனுமதித்துள்ளது.

2011ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் கோவை மாவட்டத்தில் மக்கள் தொகை 23.5 லட்சமாக உள்ளது. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் தொகை எண்ணிக்கை 15.8 லட்சமாகவும், புறநகரில் 7.7 லட்சமாகவும் உள்ளது.

இதேபோல், மதுரை மாநகராட்சி பகுதியில் 10.2 லட்சம் மக்கள் தொகையாகவும், புறநகரில் 14.7 லட்சமாக மக்கள் தொகை எண்ணிக்கை உள்ளது. மெட்ரோ ரயில் திட்டம் வந்தால், கோவை மற்றும் மதுரையில் உள்ள அனைத்து மக்களும்தான் இந்த சேவையை பயன்படுத்துவார்கள். மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் பயன்படுத்த மாட்டார்கள். எனவே, மதுரை மற்றும் கோவை மாவட்ட மக்கள் தொகை என கணக்கிட்டால் இரு மாவட்டத்திலும் 20 லட்சத்திற்கு மேல் உள்ளனர்.

ஆனால், ஒன்றிய அரசு அனுமதி தந்து உள்ள ஆக்ராவில் 16 லட்சம் மக்களும், பாட்னாவில் 17 லட்சம் மக்களும், போபாலில் 18.8 லட்சம் மக்களும் உள்ளனர்.

இந்த மூன்று நகரங்களில், ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள மெட்ரோ ரயில் 2017 கொள்கையின் படி 20 லட்சம் மக்கள் தொகையை எட்டவில்லை. ஆனால், இந்த மூன்று நகரங்களிலும் மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஒன்றிய அரசு அனுமதி தந்து உள்ளது.

இதேபோல், உத்தரப் பிரதேசத்தில் கான்பூர், மகாராஷ்டிராவில் நாக்பூர் மற்றும் புனே, மத்தியப் பிரதேசத்தில் இந்தூர் மற்றும் குஜராத்தில் சூரத் உள்ளிட்ட பல நகரங்களுக்கு ஒன்றிய அரசு மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நகரங்கள் உள்ள மாநிலங்களில் பாஜ அரசு ஆட்சி நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மற்ற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அளித்துள்ள சலுகைகளைப் போல, தமிழ்நாட்டில் உள்ள 2ம் நிலை நகரங்களை கருத்தில் கொள்ளவில்லை.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை, கலை பண்பாட்டிற்கு தலை நகராக விளங்கும் மதுரை ஆகிய இரு நகரங்களும் தொழில் நகரங்களாக வளர்ந்து வருகிறது. இந்த இரு நகரங்களும் கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் வேகமாக வளர்ந்த நகரங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளன. ஐடி, ஏற்றுமதி, நெய்தல், சுற்றுலா, கல்வி, உற்பத்தி என அனைத்திலும் வளர்ச்சி அடைந்து வரும் நகரங்களாக மாறி வருகிறது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்த இடைப்பட்ட 14 ஆண்டுகளில் கோவை, மதுரை மாநகரின் மக்கள் தொகை 20 லட்சத்தை கடந்து விட்டது. ஆனாலும், ஒன்றிய அரசு 2011ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகையை கணக்கில் கொண்டு, இத்திட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளதற்கு கோவை மற்றும் மதுரை மக்கள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

-நன்றி
'தினகரன்'
19.11.2025

---

### வி.எ.மதியழகன் எம்.சி, தலைமை! தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி – க.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதல்வர் பிறந்தநாள் கருத்தரங்கம்!

### பேராசிரியர் சுப.வீரபாண்டியன் – வி.பொன்ராஜ் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

*சென்னை, நவ. 20 -*

*சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு "நாளைய உலகின் நம்பிக்கை" எனும் தலைப்பில் கருத்தரங்கம் இன்று (20.11.2025 - வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு, நீலாங்கரை, புகாரி, ராணி மஹாலில் நடைபெறுகிறது.*

*சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், 15 வது மண்டலக் குழுத் தலைவர் நீலாங்கரை வி.எ.மதியழகன் தலைமை வகிக்கிறார்.*

*முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் வி.எட்டியப்பன், 192 வது வட்டக் கழகச் செயலாளர் கே.குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*பகுதிக் கழக நிர்வாகிகள் எஸ்.ஜானகிராமன், மா. ம கே ஸ் வ ர ன் , ஜி.விஜயகுமார், வி.எஸ்.சுதா, எம்.பாஸ்கரன், வட்டக் கழகச் செயலாளர்கள் கே.வி. சாந்தப்பன், பி.எஸ்.ஆறுமுகம், கி.சத்தியவேலன், எஸ். கர்ணா, ஏ.கே.ஆனந்த், க. ஏகாம்பரம் எம்.சி, பி.என். ஜோதி, டி.சீனிவாசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*

*இக்கருத்தரங்கில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் அப்துல் கலாம் ஆலோசகர் மற்றும் ஐ.டி.ஆர்.எம். ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வி.பொன்ராஜ், மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், சோழிங்கநல்லூர் தொகுதி பார்வையாளர் டாக்டர் ந.சந்திரபாபு, க.தனசேகரன் எம்.சி, பாலவாக்கம் க.சோமு, காசி முத்துமாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி, பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, ஜி.வெங்கடேசன், எஸ்.சங்கீதா பாரதிராஜன், எம்.கே.ஏழுமலை, எ ஸ் . ஏ . அ ரி கி ரு ஷ் ண ன் , தா.பஷீர், சி.பிரதீப், ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, க ா . வீ . தி ய ா க ர ா ஜ ன் , ஜெ . இ . பா ண் டி ய ன் , பா.அருண்குமார், எம்.பார்த்திபன், என்.அனிஷ், தடா ஓ.சுந்தரம், எஸ்.பொன்னுவேல், த.விஜயபாலன், கி. ஸ்டாலின் மொழி,*

*எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, இரா.துரைராஜ் எம்.சி, நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, கே.கண்ணன் எம்.சி, மு. இராசா எம்.சி, வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, எம். விநாயகமூர்த்தி, அயப்பாக்கம் துரை வீரமணி, சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம் சி, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், வி. கனிமொழி, ஆர்.பாலசுந்தரம், மின்னல் கந்தப்பன், பி.எஸ்.முருகேசன், பி.ஜே. பாஸ்கர், வ.செல்வகுமார் எம்.சி, மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*நீலாங்கரை பாக முகவர் ஆர்.பற்குணன் நன்றி கூறுகிறார்.*



சேலம் மாநகராட்சி, செவ்வாய்பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் அ.சோமசுந்தரம் ஆகியோர் உள்ளனர்.

---

## அறிவுத்திருவிழா....! ஒரு நல்ல Eye Opener!

An Eye Opener.! தோல்விகள் உன்னை சாய்த்து விட முயலும் தருணத்திலும் உன்னால் அடுத்த அடியை எடுத்து வைக்க முடிந்தால் எவராலும் உன்னை தோல்வி அடையச் செய்ய முடியாது. உன் செயல்களை நிறுத்தாதே... இன்னும் வேகத்தோடு செயல்படு. அதிகமாக பேசாதே....! மௌனத்தை விட... உன் வார்த்தைகள் அதிகமாக மதிக்கப்படும் கவனிக்கப்படும் என்றால் மட்டுமே பேசு. வாயால் வடை சுட்டவர்கள் ஏராளம். அந்த வடைகள் விற்பனைக்கு வர முடியாதவை. சந்தைக்கு வராத சரக்கின் முறுக்கு சமுதாயத்துக்கு எப்படித் தெரிய வரும்?

தீயவர்கள் தூயவர்களாக மதிக்கப்படும் இன்றைய காலக்கட்டத்தில் சிஸ்டம் சரியாக இல்லை. ஒன்றிய அரசின் அணுகு முறை, ஏழைகளுக்கு இலவசங்கள், கார்ப்பரேட்டுகளுக்கு சலுகைகள் என்பதே ஆகும். ஆனால் தமிழ்நாடு அரசு சற்று வித்தியாசமான அணுகு முறையை கையாள்வதால் வளர்ச்சிப் பாதையை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. இலவசங்களுக்கு பதிலாக கல்வி தருகிறார்கள். விளையாட்டு மேம்பாடு தரப்படுகிறது. பெண்களுக்கு தொழில் முனைவோர் வாய்ப்புகளும் வங்கிக் கடன்களும் தாராளமாக தரப்படுகின்றன.

பேரறிஞர் அண்ணாவின்..Tap the Rich and Pat the Poor... என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஏழைகளுக்கு உணவு தருவது மட்டுமல்ல இன்றைய தமிழக அரசின் குறிக்கோள். அந்த ஏழை எப்போதுமே ஏழையாக இருந்தால் எப்பதான் அவன் சொந்த காலிலே நிற்பது? ஆகவே ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமிகளுக்கு முன்னேற்றத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது திராவிட மாடல் அரசின் பாராட்டுக்குரிய புதிய பாதை.

அறிவுத் திருவிழா... ஒரு நல்ல Eye Opener.. இந்த அறிவு திருவிழா மூலமாக கிடைக்கப் போகின்ற செல்வத்தை எவராலும் களவாடவோ பறிக்கவோ முடியாது. economic disparity is the root cause for all evils. பணக்காரனை ஏழை ஆக்குவது அல்ல திராவிட மாடல் அரசு. பதிலாக இல்லாதவரே இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதே முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஜீவாதாரக் கொள்கையாகும்.

**வி.சி.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்

